**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 430/2019 P.W. 5/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. லாரன்ஸ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராஜேந்திரன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.06.2026.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியாது. அ.சா.1–யை எனக்குத் தெரியும். 2017–ம் வருடம் விபத்து நடந்ததாக நான் கேள்வி பட்டேன். இவ்வழக்கு சம்பவம் பற்றி வேறு எதுவும் எனகுத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154–ன் கீழ் அனுமதிக்கிறது.**

**<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. கடந்த 19.06.2017–ம் தேதி காலை 06.00 மணியளவி நெய்யூர், அஞ்சாலி படிப்பகம் அருகே சிராயன்விளை செல்லும் ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த TN75E9520 என்ற போர்வெல் வாகனத்தை குற்றம் சுமத்தப்பட்ட நபர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து ரோட்டின் இடதுபுறமாக நடந்து சென்ற ஜான் டேவிட் என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த

காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL</u>**
**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 430/2019 P.W.6/Additional Witness**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. செல்வின் ஜோஸ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. செல்லம் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** **15.06.2026.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் தற்பொழுது குளச்சல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். அங்கு பணிபுரிந்த உதவி ஆய்வாளர் தாமோதரன் மற்றும் காவல் ஆய்வாளர் முத்துராமன் ஆகியோரின் கையொப்பம் ஆவணங்களை பரிசீலனை செய்யும் பொழுது எனக்கு நன்கு தெரியும் என்பதால் நான் தற்பொழுது ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 19.06.2017–ம் தேதி காலை 08.15 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் தாமோதரன் நிலையப்பொறுப்பில் இருந்த பொழுது சுஜி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனு கொடுத்துள்ளார். அந்த **புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் 188/2017 சட்டப்பிரிவுகள் 174 இ.த.ச சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் முத்துராமன் என்பவரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

4. இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அவர் சம்பவயிடம் 19.06.2017–ம் தேதி காலை 09.00 மணிக்கு சென்று சாட்சிகள் கிளாஸ்டன் மற்றும் செல்வன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்னர் சாட்சிகள் 1 முதல் 5 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்துள்ளார். இறந்து போன ஜான் டேவிட் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்து பிரேதத்தை உறவினரிடம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்துள்ளார். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 குறியீடு செய்யப்படுகிறது.**

6. மேலும் சடலக் கூறாய்வு செய்த மருத்துவரிடம் சடலக் கூறாய்வு அறிக்கை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த சடலக் கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை கைது செய்து 05.07.2017–ம் தேதியன்று இரவு 20.00 மணியளவில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து விபத்து ஏற்படுத்திய வாகனத்தை கைப்பற்றியுள்ளார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

8. மேலும் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN75E9520 என்ற Compressor வாகனத்தையும் வாகன ஆய்வுக்கு அனுப்பி ஆய்வறிக்கை பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. சாட்சிகள் 6 முதல் 12 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்துள்ளார். மேலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் தாமோதரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

8. அவரது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் வழக்கின் சட்டப்பிரிவினை 304A இ.த.ச

மற்றும் 187, 187(3) MV Act பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த சம்பவம் நடைபெறவில்லை எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.